Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
COURT, ANNUR
Case No.C.C.No. 68 /2025

Deposition of witness for Prosecution P.W. 1 Date : 04.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name : | முருகன் | Village : | அன்னூர் |
| Father's Name : | குப்பன் | Taluk : | அன்னூர் |
| Age : | 40 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of March 2026 **(Accused Present.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் தற்போது அன்னூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் இதே காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்த சமயத்தில் கடந்த 16.01.2025 தேதி நானும் காவலர் அழகுராஜா, காவல் உதவிஆய்வாளர் செந்தில் குமார் என்பவருடன் மதியம் சுமார் 2.00 மணியளவில் அக்கரைசெங்கப்பள்ளியிலுள்ள சுப்பிரமணியம் என்பவரின் தோட்டத்திற்கு சென்றபோது மண்பானையில் சுமார் 15 லிட்டர் தென்னங்கள் இருந்தது. உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அந்த வழக்கு சொத்தினை கைப்பற்றி அழித்தல் மகஜர் மூலம் அழித்து, விசாரணையின் அடிப்படையில் எதிரியை கைதுசெய்து அவர்மீது வழக்கு பதிவு செய்து, பின்னர் நிலைய பிணையில் விடுவித்தார். இவ்வழக்கின் ஆஜர் எதிரிதான் இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரி சுப்பிரமணியம் ஆவார். இவ்வழக்கு தொடர்பாக இவ்வழக்கின் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். தற்போது என்னிடம் கணினி திரையில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் கண்டுள்ள 1-ம் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தற்போது என்னிடம் கணினி திரையில் காட்டப்படும் அழித்தல் மகஜரில் கண்டுள்ள 1-ம் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**மேற்கண்ட சாட்சி கையொப்பங்கள் இரண்டும் முறையே அ.சா.ஆ. 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

தற்போது நான் அளித்துள்ள சாட்சியத்தை தான் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தபோது அளித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் தகவலாளி மற்றும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இரண்டுமே காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமார் என்றால் சரிதான். அவர்தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் கைபற்றுதல் மற்றும் அழித்தல் மகஜரில் இந்த வழக்கின் குற்ற எண்ணை குறிப்பிட்டுதான் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணை சாட்சியத்தில்

கூறியுள்ளதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்திற்கு நான் செல்லவில்லை என்றும் என் முன்னிலையில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் தவறு. இவ்வழக்கின் ஆவணங்கள் புள்ளி விவர கணக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் தவறு. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் தவறு.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur